2005 மார்ச் 29]

முடியாது. இத்திட்டத்தின்கீழ் அரசு ஆணையில் அனுமதிக்கப்பட்டுள்ள சொத்துக்களைப் புதுப்பித்தல் மற்றும் தர மேம்பாடு செய்தல் போன்ற சிறப்புப் பழுதுபார்த்தல் பணிகளை அரசு மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களுக்குச் சொந்தமான பள்ளிக் கட்டடங்களுக்கு மட்டுமே மேற்கொள்ள இயலும். எனவே, அரசு நிதி உதவி பெறும் கல்வி நிறுவனத்திற்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியினைப் பயன்படுத்த வழிவகை ஏதுமில்லை.

முற்பகல் 10–40

HON. SPEAKER: Sandra, give a request to our Amma.

வினா எண் 232, திரு. பெ. பழனியப்பன், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

232—

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி

***11093—திரு. பெ. பழனியப்பன்:**

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், இருளப்பட்டியிலுள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியைப் பிரித்து, எச். புதுப்பட்டியில் புதிதாகத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இருளப்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியைப் பிரித்து, எச். புதுப்பட்டியில் புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி தொடங்க சாத்தியக்கூறுகள் இல்லை. (ஆ) கேள்வி எழவில்லை.*

திரு. பெ. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய காலை வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி*

வட்டத்திலுள்ள, எனது தொகுதியிலுள்ள இருளப்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியைப் பிரித்து, புதுப்பட்டியிலே ஒரு தலைமை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று நான் கோரிக்கை வைத்திருந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அதற்கு வாய்ப்பு இல்லை என்ற ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும்கூட, அந்த இருளப்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி என்பது, இரண்டு வருவாய் கிராமங்களை, வருவாய் ஊராட்சிகளை உள்ளடக்கியதாகும். இவற்றில், இருளப்பட்டி, நாகலூர், மூக்காரெட்டிபட்டி, பாப்பம்பாடி, காந்தி நகர், புதுப்பட்டி, கவுண்டன்பட்டி, தோரனூர், காளிபுரம், கனடதாதன்பட்டி போன்ற பெரிய கிராமங்களை உள்ளடக்கி இந்தக் கூட்டுறவு வங்கி செயல்பட்டு வருகிறது. விவசாயப் பெருங்குடி மக்கள் அந்த வங்கிக்குச் செல்லவேண்டுமென்று சொன்னால், சுமார் 7 கிலோ மீட்டர் தொலைவு நடந்து சென்று, அந்த விவசாயப் பொருட்களை எடுத்துவரக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இந்தத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி என்பது, விவசாயிகளுடைய துயர் துடைக்கும் வங்கியாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதை இரண்டாகப் பிரித்து, புதுப்பட்டியிலே ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியை அமைத்துக் கொடுத்தால், அந்தப் பகுதி விவசாயப் பெருங்குடி மக்களுக்கு மிகவும் பயனுடையதாக இருக்கும் என்பதைக் கருத்தில் கொண்டு, மீண்டும் இந்தத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியைப் பிரிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக, ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி செயல்படுவதற்கு 2,000 எக்டேர் நிலப்பரப்பு பாசனப் பகுதியைப் பெற்றதாக, பயிர் செய்யும் நிலமாக இருக்க வேண்டும். இருளப்பட்டி, எச். புதுப்பட்டி ஆகிய இரண்டு வருவாய் கிராமங்களுக்கும் சேர்த்து, மொத்தம் 2,368 எக்டேர் நிலப்பரப்பு பாசனப் பகுதியுள்ள விவசாய நிலங்கள் மட்டுமே உள்ள காரணத்தினாலும், இரண்டு கிராமங்களையும் தனித்தனியாகப் பிரித்து, இரண்டு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளை அமைக்கும்போது, இரண்டு வங்கிகளுமே அதனுடைய வாழ்திறனை இழந்துவிடக்கூடிய ஒரு சூழல் இருக்கின்ற காரணத்தினால், நபார்டு வங்கியின் வழிகாட்டுதலின்படி, இதைப் பிரிப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதனைக் கூறி, அமர்கின்றேன்.

2005 மார்ச் 29]

திரு. பெ. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பெரிய ஊராட்சியாக இருக்கிற காரணத்தினாலும், அங்கே தொலைதூரம் நடந்து சென்று, விவசாயிகளுக்குத் தேவையான உரம் போன்ற பொருட்களை வாங்க வேண்டிய அவசியம் இருக்கிற காரணத்தினாலும், தற்போது நிலைமை சரியில்லை என்று சொன்னாலுங்கூட, வருகிற நிதியாண்டிலாவது அதை மீண்டும் பிரித்து, ஒரு வேளாண்மைக் கூட்டுறவு வங்கி அமைத்துக் கொடுக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எச். புதுப்பட்டி வருவாய் கிராமத்தினுடைய மொத்தப் பாசனம் பெறுகின்ற நிலப்பரப்பானது 850 எக்டேர் நிலப்பரப்பு மட்டும்தான் உள்ளது. நபார்டு வங்கியின் வழிகாட்டுதலின்படி, 2,000 எக்டேர் பாசனம் பெறக்கூடிய நிலப்பரப்பு இருந்தால் மட்டுமே ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியானது தொடங்கப்படக்கூடிய சூழ்நிலை உள்ள காரணத்தினால், சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை என்கின்ற பதிலைச் சொல்லி, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 233, திரு. என்.கே. பெருமாள், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

233—

கூட்டுறவு பயிற்சி நிலையம்

***19575—திரு. என்.கே. பெருமாள்:**

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளத்தில் கூட்டுறவு பட்டயப் பயிற்சி நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் தற்போது காஞ்சிபுரம், வேலூர், தருமபுரி, சேலம், கடலூர், தஞ்சாவூர், மதுரை, சாத்தூர், திருநெல்வேலி, நாகர்கோவில், கோவை, ஈரோடு, நாமக்கல், விழுப்புரம், திருச்சி, திண்டுக்கல், சிவகங்கை, திருவாரூர், திருவண்ணாமலை மற்றும் தேனி ஆகிய 20 கூட்டுறவு மேலாண்மை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.